N.K.K.என்று அழைக்கப்படும் திரு. N.K.கருப்புசாமி அவர்கள் இரம்யமான நம்பியூர் கிராமத்தில் திரு கருப்பகவுண்டர் பெரியம்மாள் தம்பதிகளின் தவப் புதல்வராக மார்ச் மாதம் 1ம் தேதி 1937ல் பிறந்தார்.

## குழந்தைப் பருவம்

நம்பியூரில் உள்ள ஆரம்பப் பள்ளியில் 4-ஆவது வரை படித்த இவர் கோவையில் இவரது தந்தையின் நண்பர் வீட்டில் தங்கி ஆசிரியர் திரு ரங்கசாமி அவர்களிடம் 5-ஆம் வகுப்புவரை படித்தார். பின்னர் 6-ம் வகுப்பை கோவை தேவாங்கர் உயர்நிலைப்பள்ளியிலும் 7-ம் வகுப்பை கோவை சர்வஜன உயர்நிலைப்பள்ளியிலும் பயின்றார். பின்னர் மீண்டும் நம்பியூர் அரசு பள்ளியில் 8-ம் வகுப்பைத்தொடர்ந்தார், 9-ம் வகுப்பில் இவரின் ஆங்கில ஆசிரியர் திரு. பீமசேனாராவ் இவரின் ஆங்கில அறிவுக்கு வித்திட்டார் அன்று தொடங்கிய ஆங்கில நாளிதழ் (THE HINDU) படிக்கும் பழக்கம் இன்று வரை தொடர்கிறது.(60 ஆண்டுகள்) அன்றைய SSLCல் பள்ளியில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். பின்னர் கோவை PSG கலைக் கல்லூரியில் 2 ஆண்டு Intermediate படிப்பையும், பின்னர் கோவை அரசு கலைக் கல்லூரியில் B.A. (பொருளாதாரம்) படித்தார். 1958 ல் காவல் துறை உதவி ஆய்வாளர் பதவிக்கு விண்ணப்பித்து அதில் தேர்வாகி, வேலூரில் பயிற்சி காலம் முடிந்து 1960 ல் பரமத்தி வேலூரில் SI-ஆக பணியமர்ந்தார். 9 ஆண்டுகள் நேர்மையான போலீஸ் அதிகாரியாக பணியாற்றிய இவர் தன் குடும்ப சூழ்நிலை காரணமாக காங்கேயத்தில் பணியாற்றும் பொழுது இராஜினாமா செய்தார். 1961-ல் அத்தை மகள் வசந்தியோடு இவரது திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பிறகு 1963-ல் சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்து தன் இரண்டாண்டு சட்டப்படிப்பை முடித்தார். திரு சிவசங்கரன், திரு குருசாமி, திரு சாந்தகுமார், திரு. தில்லை சிதம்பரம். இவரின் சட்டக் கல்லூரி நண்பர்கள்.

## வழக்கறிஞர் பணி

1970ல் கோபியில் தன் வழக்கறிஞர் பணியை மேற்கொண்டார், வழக்கறிஞர் திரு. நந்த கோபால் இவருக்கு மிக நெருக்கமானவர். வழக்கறிஞர் திரு.V.M. செல்லமுத்து இவரோடு 40 ஆண்டுகள் ஒன்றாக Practise செய்தவர். இவரின் ஜூனியர் வழக்கறிஞர்கள் P.M.விஸ்வநாதன், ஐசக், செல்வக்குமார், விஜயகாந்த். இதில் விஜயகாந்த் அவர்கள் தற்போது திருப்பூரில் இவரது வழக்குகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்.

இளம் வழக்றிஞர் திரு. சென்னியப்பன் அவர்கள் இவரின் 50 ஆண்டுகால வழக்கறிஞர் பணிக்கு விழா எடுத்துச் சிறப்பு செய்தவர்.

## அரசியல் பிரவேசம்

1969 ல் நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தை முன்னின்று நடத்தி 3 மாதம் வேலுர் சிறையில் அடைக்கப்பட்டார். இப்போராட்டத்திற்கு பெரிதும் உறுதுணையாயக இருந்தவர்கள் திம்மப்பையன்பாளையம். திரு. வேலுச்சாமி, பொலாவபாளையம் நஞ்சப்ப கவுண்டர், ராமண்ண கவுண்டர், சுப்பண கவுண்டர், மலையப்பாளையம் M.சாமியப்பன், குப்பிபாளையம் திருமூர்த்தி, கூடக்கரை V.M.செல்லப்பன் ஆகியோர். காமராஜரின் கடும் கண்டனத்திற்குப்பின் அரசு இவர்களை விடுதலை செய்தது. அந்த விவசாயப் போராட்டம் தான் விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்திற்கு வழிவகுத்தது.

1970ல் காமராஜரின் மேல் கொண்ட பற்றினால் காங்கிரஸ் பேரியக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு அரசியலில் அடி எடுத்து வைத்தார். காமராசர் அவர்கள் 1975 ல் கோபிக்கு வருகை புரிந்த பொழுது குமரி ஆனந்தன் அவர்களால் காமராசருக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். அப்பொழுது திரு.காமராசர் N.K. கருப்புசாமியை விவசாய போராட்டத்தில் கலந்து கொண்டபொழுதே எனக்குத் தெரியும், என்று 1000 பேருக்கு மேல் கூடியிருந்த கூட்டத்தில் கூறி அவர்மேல் கொண்ட பற்றை மேலும் அதிகப்படுத்தினர்.

இவர் கோபி தியாகி லட்சுமண ஐயர், K.S.பச்சியப்பன், S.M.ஷெரிப் ஆகியோருடன் இணைந்து கட்சிப் பணியாற்றினார். நம்பியூரில் N.K. கருப்புசாமி ஐயா தலைமையில் 1975ம் ஆண்டு ஜூன்மாதம் 10 -ம் தேதி அன்று சந்தைத் திடலில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக்கூட்டத்திற்கு திரு காமராஜர் அவர்கள் வருகை புரிந்தார்.

1977-ல் ஸ்தாபனக் காங்கிரஸ் சார்பில் கோபி நாடாளுமன்றத் தொகுதிக்கு போட்டியிட்டார். இவரின் பெரும் முயற்சியால் தான் நம்பியூரில் பவர்ஹவுஸ் கட்டப்பட்டது. 1980ல் திரு.மொராஜி தேசாய், திரு. ஜெகஜீவன் ராம் ஆகியோரின் ஆங்கில உரையைத் தமிழில் மொழிபெயர்த்தார். இந்த சமயத்தில் தான் திரு.M.G.R.அவர்களை நேரில் சந்திக்கும் வாய்ப்பு இவருக்கு கிடைத்தது.

## நண்பர்கள்

PSG கல்லூரியில் Intermediate படிக்கும்போது திரு.A.K சோமசுந்தரம் அவர்களுடன் நெருங்கி பழகி அந்த நட்பை வழுப்படுத்தி தொடரும் விதமாக தன் மனைவியின் சகோதரியை திருமணம் செய்து வைத்தார். அவர் இறக்கும் வரை இருவரும் நகமும் சதையுமாக வாழ்ந்தவர்கள். இவர்களின் மற்றைய இரு நெருங்கிய நண்பர்கள் K.P.முருகையன் வழக்குரைஞர், N.K.முருகையன் ஆசிரியர், திரு. ராஜூ ஆசிரியர், திரு. பாலசுப்பிரமணியம், திரு. குழந்தைசாமி ஆசிரியர் இன்றுவரை நட்புடன் பழகிவருகிறார்கள். திரு.N.K.Kஅய்யா அவர்களின் அப்பாவின் நெருங்கிய நண்பர்களான வெங்கடாசலம் உடையார் திரு. N.K.கந்தசாமி ஆகியோர் அப்பாவின் பொது வாழ்க்கைக்கு உதவிய இருந்தவர்கள். தீவிர காங்கிரஸ்காரரான திரு. சென்னியப்ப நாடார், அவரது மகன்கள், திரு. மாரப்பன் அவர்களும் இன்று வரை இவரது குடும்பத்துடன் தொடர்பில் உள்ளவர்கள்.

Dr.S.ஜனகரத்தினம், மூத்த வழக்கறிஞர் சின்னசாமி (APC) ஈரோடு. இவர்கள் இருவரையும் தன் குருவாக கொண்டவர். திரு.N.K.K.அவர்களின் வாதத் திறமையை கண்ட APC அவர்கள் இவரை ஜூனியர் கிருஷ்ணசாமி ஐயர் என்று பாராட்டினார். இன்று வரை இவர்களைத்தான் தன் நினைவுகளில் ஏந்தி வருகிறார். N.R.கிருஷ்ணசாமி Retaired Tasildar, நீதிபதி திரு. மோகன், திரு. K.R. வெங்கடாசலம் ஆகியோர் ஒரு வழங்கறிஞர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு N.K.K.ஒரு உதாரணம் என்று கூறி மகிழ்வார்.

## கோபியில் பணியாற்றிய நீதிபதிகள்

திரு. காமராஜ், திரு. விஸ்வநாத், சசிகலா , JMI High Court நீதிபதியாக இருக்கும் திரு. சதீஸ்குமார் உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற P.R. சிவகுமார் இவர் தற்போது தமிழ்நாடு ஆதிதிராவிட பழங்குடியினர் நல ஆணையத்தின் தலைவராக உள்ள நீதியரசர்.

திரு.S.V.சரவணன் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவராக இருந்து போது தீவிர காங்கிரஸ்காரரான இவர் தன் நேர்மையாலும் நற்பண்புகளாலும் ஐயாவைக் கவர்ந்தவர். நம்பியூர் காங்கிரஸ் கட்சியின் வட்டாரத் தலைவர் திரு. ரத்தினசாமி அவர்கள் ஐயாவின் மிகுந்த அன்பும் பாசமும் கொண்டவர்.

இவரது வாழ்க்கையில் திருப்புமுனையை ஏற்படுத்தியவர் பெருந்துறை Circle Inspector. திரு. கிருஷ்ணநாயர் அவர்கள் தான் அய்யாவின் நேர்மையை பார்த்து தாங்கள் காவல் துறையில் இருப்பது கடினம் ஆகவே ராஜினாம செய்து விட்டு வழக்கறிஞராக பணியை தொடருங்கள் என்று ஆலோசனை வழங்கியவர். இதுவே இவரது வாழ்வில் மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது. இவர் விஜயகுமார் IPS அவர்களின் தந்தையாவார். இவர் தற்போது காஷ்மீரில் IG யாக உள்ளார். NKKதன் வழக்கறிஞர் பணிபுரியும் துறையில் (கிரிமினல்) பல புகழ்பெற்ற வழக்குகளில் திறம்பட வாதாடி வெற்றிப் புகழ் பெற்றவர் இவர் தமிழ்நாடு முழுவதும் அறிமுகமான முத்த வழக்கறிஞர்.

இவர் Vorarious Reader என்று சொல்லக்கூடிய படிப்பதில் தீவிர ஆர்வம் கொண்டவர் காந்தியின் சுயசரிதை, நேருவின் சுயசரிதை, உலக வரலாறு மற்றும் பல்வேறு தலைவர்கள் எழுதிய புத்தகங்களைப் படித்தவர்.

கமாராஜர், காந்தி, நேரு ஆகியோரின் மீது பேரன்பும் பெரும் பக்தியும் கொண்டவர். அதிலும் குறிப்பாக பெருந்தலைவர் காமராஜரைப் பற்றி பேசும்போது அவர் கண்களில் கண்ணீர் வழிந்தோடும் அத்தகைய மக்கள் தலைவரின் நினைவைப் பேற்றும் வகையில் 1987ல் 20 குழந்தைகளுடன் தொடங்கப்பட்ட காமராஜ் கல்வி நிறுவனம் அன்னாரின் அயராது உழைப்பால் தற்போது 1500 மாணவர்களைக் கொண்ட மேல்நிலைப்பள்ளியாக பீடு நடை போடுகிறது. காவல் துறை அதிகாரியாக, சிறந்த அரசியல்வாதியாக, திறமைவாய்ந்த வழக்கறிஞராக, சிறந்த கல்வியாளராக, கர்மவீரர் காமராஜரின் உண்மை தொண்டனாக பல்வேறு பரிணாமங்களைக் கொண்டவர் நம் ஐயா அவர்கள் மாணவர்களின் நலனையும் ஒழுக்கத்தையும் இரு கண்களாகப் போற்றுபவர் மதிப்பெண்ணுக்கு மதிப்பளிக்காமல் மாணவர்களின் தனித் திறமையை ஊக்குவிப்பவர். அன்னாரது கல்வித் தொண்டில் நாங்களும் இணைந்திருப்பது எங்களுக்குப் பெருமையே.

ஜெய்ஹிந்த்